பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 சிறவிமத: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஐப்பசி 12 (28—10—68) திங்கள் ★ வெளியூர்: ஐப்பசி 13 (29—10—68) செவ்வாய் [இதழ்: 109

## புதிய மேயர் தேர்தல்

### நவம்பர் முதல் வாரத்தில் நடைபெறும்

சென்னை, அக். 27—

சென்னை மாநகராட்சிமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புதிய உறுப்பினர்கள், நவம்பர் முதல் நாள், மாநகராட்சி ஆணையர் முன்னிலையில் பதவி யுறுதி ஏற்பர்.

புதிய மேயர் தேர்தலுக்கான நாள், நவம்பர் முதல் வாரத்தில் குறிப்பிடப் படும்.

தற்காலிகமாக நியமிக்கப்படும் தலைவர், தலைமைதாங்கி புதிய மேயர் தேர்தலை நடத்துவார்.

இந்த முறை, மாநகராட்சிமன்ற மரபுப்படி, பார்ப்பனரல்லாத ஒருவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

# மாநகராட்சிமன்றத் தேர்தல் முடிவு

## தி. மு. கழகம் பெற்ற வெற்றி

சென்னை, அக். 28—

அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மாநகராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன.

திராவிட முன்னேற்றக் கழகம் குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்டியிருக்கிறது.

கழகத் தோழமைக் கட்சிகளும் கணிசமான வெற்றியைப் பெற்றிருக்கின்றன.



வி. முனுசாமி
(12-வது வட்டம்)

## ஐந்தாவது முறையாகத் தேர்வு

### வி. முனுசாமி பெற்ற சிறப்பு வெற்றி

சென்னை, அக். 28—

முன்னாள் மேயரும், மாநகராட்சி மன்ற ஆளுங்கட்சித் தலைவரும், மத்தியக் குழுத் தலைவருமான திரு. வி. முனுசாமி சென்னை 12-வது வட்டத்திலிருந்து மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இவர், இப்போது மாநகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது ஐந்தாவது முறையாகும்.

1948-ல் இவர் முதன்முதலாக மாநகராட்சிமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பல ஆண்டுகள் தொடர்ந்து மாநகராட்சி உறுப்பினராக இருந்தவரும் பிரபல காங்கிரசுக்காரரும், யாராலும் தோற்கடிக்க முடியாது என்று கருதப்பட்டவருமான கத்தே ரங்கைய நாயுடுவைத் தோற்கடித்த பெருமை இவருக்கு உண்டு. அதேபோல், 25 ஆண்டுகள் தொடர்ந்து மாநகராட்சிமன்ற உறுப்பினராக இருந்த திரு. ஜி. இராசமன்னாரைத் தோற்கடித்தவரும் இவரே! சென்ற தேர்தலில் வட்டத்தைவிட்டு வட்டம் மாறி வந்து அவருடன் போட்டியிட்டு வென்றார்! இப்போதும் அதே வட்டத்தில்தான் வெற்றி பெற்றிருக்கிறார்!

வாக்கு எண்ணிக்கை நடைபெற்ற பன்னிரண்டு இடங்களிலும் மக்கள் ஆயிரக்கணக்கில் குழுமியிருந்தனர்.

தி. மு. க. தலைமைக் கழகமான 'அறிவகத்'தின் முன்னும் ஏராளமானோர் குழுமியிருந்து, தேர்தல் முடிவுகளை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினர்.

கழக வேட்பாளர்களும், கூட்டணி வேட்பாளர்களும் வெற்றி பெற்ற செய்தி கிடைத்வுடன் கைதட்டி ஆரவாரம் செய்து தங்கள் மகிழ்ச்சியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

வெற்றி பெற்ற கழக—கூட்டணி வேட்பாளர்கள் வருமாறு:—

1. தண்டையார்பேட்டை
கே. துரைராசு (தி.மு.க)

4. சஞ்சீவிராயன்பேட்டை
கே. எம். கண்ணபிரான் (தி.மு.க.)

11. ஏழுகிணறு (வடக்கு)
ஜி. இலட்சுமிபதி எம்.சி. (தி.மு.க.)

12. அம்மன்கோயில் (வடக்கு)
வி. முனுசாமி எம்.சி. (தி.மு.க.)

14. வள்ளல் சிதக்காதி நகர்
ஆர். சிலார் மியான் (மு.லீக்)

23. செரியன் நகர்
ஜி. கண்ணன் (வலது கம்யூ.)

36. பெரியமேடு
அ சுப்பிரமணியம் (தி.மு.க.)

41 வியாசர்பாடி
த. இராகவேலு (தி.மு.க)



வேலூர் நாராயணன்
(55-வது வட்டம்)

42. இளங்கோ நகர்
வி. தனசேகரன் (தி.மு.க.)

43. பெரம்பூர்
வி. தணிகாசலம் எம்.சி. (தி.மு.க.)

51. செம்பியம்
சீதாபதி (இடது கம்)

53. சிறுவள்ளூர்
டி. எஸ் சீவரத்தினம் (தி.மு.க)

55. நாகம்மையார் நகர்
வேலூர் டி. நாராயணன் எம்.ஏ.பி.எல்., எம்.சி (தி.மு.க.)

61. அண்ணா நகர்
சு வே. தட்சணாமூர்த்தி (தி.மு.க.)

63. நுங்கம்பாக்கம்
எம். எஸ். இராமச்சந்திரன் (தி.மு.க.)

65. சேத்துப்பட்டு
கா முருகேசன் (தி.மு.க.)

71. ஆயிரம்விளக்கு
பி. கே. கேசவன் (தி.மு.க)

## கே. எம். கண்ணபிரான் வெற்றி!

சென்னை 4-வது வட்டத்தில் கழக வேட்பாளரான கே. எம். கண்ணபிரான் வெற்றி பெற்றிருக்கிறார்.

தோழர் கண்ணபிரான் சென்னை மாவட்டத்தில் முக்கிய கழகத் தோழர்களில் ஒருவர்; செயல் வீரர்; முன்னாள் மாவட்டச் செயலாளர்.

ஏற்கனவே இவர் போட்டியிட்ட மூன்று முறையும் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் தோற்க நேர்ந்தது. எனினும் மனச்சோர்வின்றி தொடர்ந்து இந்த முறையும் போட்டியிட்டார். விடா முயற்சி வெற்றி தந்தது.

இவர், பொதுக் குழு உறுப்பினராகத் தொடர்ந்து வருகிறார்; தி. மு. க. மாநில மாநாட்டுக்குத் தொண்டர் படைத் தலைவராக இருந்து பணியாற்றி அனைவரது பாராட்டையும் பெற்றிருக்கிறார்.

இதுவரை காங்கிரசிடம் இருந்து வந்த இந்த வட்டத்தை இப்போது கழகத்துக்குக் கைப்பற்றித் தந்திருக்கிறார்.

72. அழகிரி நகர்
எம்.ஏ. ஜேசுதாஸ் எம்.சி.

74. அமீர் மகால்
என். சுலைமான் (மு.லீக்)

84. நேரு நகர்
டாக்டர் நசீர் முகம்மது (மு.லீக்)

91. விவேகானந்தாபுரம்
எஸ். வி. வேலு (தி.மு.க.)

92. மாதவபெருமாள்புரம்
அ சி. துளசிங்கம் எம்.சி. (தி.மு.க.)

93. காரனேசுவபுரம்
கே. கோவிந்தசாமி எம்.சி. (தி.மு.க.)

94. சாந்தோம்
இரா. காசிச்சாமி (தி.மு.க.)

102. கலைவாணர் திடல்
சி. ஆர். நரசிம்மன் (சுதந்.)

103. நக்கீரர் நகர்
வை. பாலசுந்தரம் (தி.மு.க.)

111. அமைந்தகரை
செ. மோகனப்பா (தி.மு.க.)

112. பெரியார் நகர்
சி. வி. சிட்டிபாபு (தி.மு,க)

113. வடபழனி
சோ. கி மூர்த்தி (தி.மு.க)

## முதல் செய்தி மோகனப்பா வெற்றி!

சென்னை, அக். 28—

தேர்தல் முடிவுகள் தொடர்பாக 'நம் நாடு' அலுவலகத்திற்குக் கிடைத்த முதல் செய்தியே வெற்றிச் செய்தியாகத்தான் இருந்தது.

சென்னை 111-வது வட்டத்தில் போட்டியிட்ட கழக வேட்பாளர் தோழர் செ. மோகனப்பா வெற்றிபெற்ற செய்திதான் அது!

அதன்பிறகுதான் மற்ற வட்டங்களின் செய்தி அடுத்தடுத்து கிடைத்துக்கொண்டிருந்தன!



சோ. கி. மூர்த்தி
(113-வது வட்டம்)

114. நெடுஞ்செழியன் நகர்
சா. கணேசன் எம்.சி.

115. எம்.ஜி.ஆர். நகர்
கோ. அய்யாவு (தி.மு.க.)

116. காமராஜ் நகர்
வி. தேவநாதன் (சுதந்.)



இரா. காசிச்சாமி
(94-வது வட்டம்)

## கோடம்பாக்கம் கழகத்தின் கோட்டையே!

சென்னை, அக். 28—

கோடம்பாக்கம், சென்னை மாநகராட்சிமன்றத்துடன் இணைக்கப்பட்ட 1948 முதல் இதுவரை, அங்கு காங்கிரசுக் கட்சி வெற்றிபெற்றதே இல்லை!

1959-வரை தொடர்ந்து கழக ஆதரவுபெற்ற சுயேச்சையாளரே வெற்றிபெற்றுவந்தார்; அதன்பிறகு கழக வேட்பாளரே வெற்றிபெற்றார்!

கடந்த இரு தேர்தல்களிலும் சென்னை 92-வது வட்டமாக இருந்துவந்த இவ்வட்டத்தில் தோழர் சா. கணேசன் வெற்றி பெற்றார்; இப்போது அந்த வட்டம், 113 – 114 என இரு வட்டங்களாகப் பிரிக்கப்பட்டது; இந்த இரு வட்டங்களிலும் கழக வேட்பாளர்களே (சோ. கி. மூர்த்தி, சா. கணேசன்) வெற்றிபெற்றிருக்கின்றனர்!

கோடம்பாக்கம் கழகத்தின் கோட்டை என்பதை மீண்டும் ஒரு முறை உறுதிப்படுத்தியிருக்கிறது இந்த மாநகராட்சித் தேர்தல்!

இப்பகுதி சென்னை மாநகராட்சியுடன் இணைவதற்குமுன், சைதாப்பேட்டை நகராட்சிக்கு உட்பட்டிருந்தது; அப்போதும் இங்கு காங்கிரசுக்காரர்கள் வெற்றிபெற்றதில்லை!

# உணவு உற்பத்தியில் மின்சார வாரியத்தின் பங்கு

## பாசனக் கிணறுகளுக்கு இணைப்புக் கொடுப்பதில் காட்டிய அக்கறை

### தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பாராட்டு

சென்னை, அக். 28—

தமிழக மின்சார வாரியத்தின் சொந்த அச்சகத்தை, தொழில் துறை அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்துவைத்தார்.

சுமார் ரூ. 1.50 இலட்சம் செலவில் துவங்கப்பட்டுள்ள இந்த அச்சகத்திற்கு செக்கோஸ்லோவேகியா, கிழக்கு ஜெர்மனி, இரஷ்யா ஆகிய நாடுகளிலிருந்து அச்சு இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த அச்சகத்தில் 50-பேர் பணியாற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

அச்சகத்தின் திறப்பு விழாவின் போது அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் மின்சார வாரியத் தலைவர் திரு. வி. பாலசுந்தரம், சுட்டிக் காட்டிக் குறிப்பிட்டதாவது :—

"மின்சார வாரியம், ஆண்டிற்கு ரூ. 15-இலட்சத்திற்கு அச்சுப் பணிகளை அரசின் அச்சகத்திற்கும், தனியார் அச்சகத்திற்குத் தந்துவந்தது; ஆனால், புள்ளி விவரங்களை அதிகமாகக் கொண்ட அச்சுப் பணிகளை ஏற்பதில், தனியார் அச்சகங்கள் அக்கறைகாட்டாததால், மின்சார வாரியமே சொந்தத்தில் அச்சகம் நடத்த முன்வந்தது."

## அமைச்சர் வாழ்த்து

வில்லிவாக்கத்தில் அமைந்துள்ள இந்த அச்சகத்தைத் திறந்துவைத்த அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், 'மின்சார வாரியம் துவங்கியுள்ள அச்சகம் நன்கு வளர்ச்சியுற்று, அரசின் அச்சுப் பணிகளையும் செய்து தரும் நிலை ஏற்படவேண்டும்' என வாழ்த்தினார்.

### மின்சாரக் கட்டணத்தைக் குறைக்குமாறு கோரிக்கை

"தொழில்துறைக்கு வழங்கப்படும் மின்சாரக் கட்டண விகிதத்தைக் குறைக்கும்படி மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இதனால் ஏற்படுகின்ற இழப்பைச் சரிக்கட்ட வேறு வழிகளில் வருவாயைப் பெருக்கிக்கொள்வதற்கு மின்சார வாரியம் முன்வர வேண்டும்.

கடந்த ஆண்டில் மழையின் அளவு குறைவாக இருந்த போதிலும், மின்சார வாரியம், பாசனக் கிணறுகளுக்கு விரைவாக மின்சார இணைப்புக் கொடுத்ததால்தான், உணவு உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெற முடிந்தது.

தமிழகத்தில் சுமார் 9 இலட்சம் பாசனக் கிணறுகள் உள்ளன; இவற்றில் சுமார் மூன்றரை இலட்சம் கிணறுகளுக்கு மின்சார இணைப்புத் தரப்பட்டிருக்கிறது.

இப்போது செயலாற்றி வருவது போலவே மின்சார வாரியம் விரைவாக மின்சார இணைப்புகளைத் தரமுயன்றால், இன்னும் ஐந்தாண்டுகளில் எல்லாப் பாசனக் கிணறுகளுக்கும் மின்சார இணைப்பைத் தந்துவிட இயலும்."

# காஞ்சியில் புற்றுநோய் ஆராய்ச்சி நிலையம்

### சனவரியில் இயங்கும்

காஞ்சிபுரம், அக். 28—

புற்றுநோய் ஆராய்ச்சி நிலையம் ஒன்று, காஞ்சிபுரத்தில், அடுத்த ஆண்டு சனவரியிலிருந்து இயங்கத் துவங்கும்.

ரூ. 1-கோடி செலவில் உருவாகவிருக்கும் இந்நிலையத்தைக் கட்டுவதற்காகக் கோனேரிகுப்பத்தில் 10-ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தைத் தமிழக அரசு மேற்கொண்டிருக்கிறது; உலக சுகாதார அமைப்பின் நார்வே நாட்டுப் பிரிவினர், இத்திட்டத்துக்கு உதவுவர்.

நார்வே புற்றுநோய் ஆராய்ச்சிக் கழக இயக்குநர் டாக்டர் ரெய்டர் ஈசர் இதுபற்றிக் கூறுகையில், நாடு முழுவதிலும் பல இடங்களைப் பார்வையிட்டு ஆராய்ந்தபின், இறுதியாகக் காஞ்சியைத் தாம் தேர்ந்தெடுத்ததாகக் குறிப்பிட்டார்.

"இந்நிலையத்துக்கு ரூ. 10.5 இலட்சம் பெறுமான சாதனங்களை நார்வே புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகம் உதவ முன்வந்திருக்கிறது" என்றும் அவர் சொன்னார்.

இந்நிலையத்தை நடத்தும் செலவை உலகச் சுகாதார நிறுவனம் ஏற்கும்.

# ஐ. நா.-வின் இலட்சியம் நிறைவேறியதா?

### ஊ--தாண்டின் மனவேதனை!

ஐ. நா., அக். 26—

"ஐ. நா. பட்டயத்தின் இலட்சியங்கள் நிறைவேறவில்லை; அணு ஆயுதப் போர் அபாயம் நீங்கவில்லை; வறுமையும் பிணியும் மக்களை வாட்டுகின்றன; அத்துடன் பல இலட்சக்கணக்கான மக்கள், தங்கள் உரிமைகளைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ளும் வாய்ப்பைப் பெற இயலாமல் அவதியுறுகின்றனர்"

என்று, ஐ. நா.-வின் 23-வது ஆண்டு விழாவினையொட்டி அனுப்பியுள்ள செய்தியில், ஐ. நா. பொதுச்செயலாளர் ஊ-தாண்ட் வேதனையுடன் குறிப்பிட்டிருக்கிறார்; அச் செய்தியில் மேலும் அவர் கூறியிருப்பதாவது :—

"இந்தக் குறைபாடுகளுக்கெல்லாம் ஐ. நா.-வை மட்டும் குறைகூற இயலாது; அனைத்து நாடுகளும், தமது அறநெறி பலத்தைப் பயன்படுத்தி --- குறுகிய சுயநலத்தை அகற்றி --- பொது இலட்சியத்தை அடைவதற்கு முயற்சி செய்யவேண்டும்."

# திராவிட நாகரிகம்

### அமெரிக்காவில் கருத்தரங்கு

அண்ணாமலைநகர், அக். 28—

அமெரிக்காவிலுள்ள டெக்சாஸ் பல்கலைக் கழகத்தில், வரும் டிசம்பர் 2-ம் நாள் முதல் 7-ம் நாள் வரையில், திராவிட நாகரிகம்பற்றி உலகக் கருத்தரங்கு நடைபெறும்.

ஆசிய ஆராய்ச்சித் துறையினரால் இந்தக் கருத்தரங்கு நடைபெறுகிறது.

இதுபோன்ற கருத்தரங்கு அமெரிக்காவில் நடத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

டெக்சாஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆண்டரி எப். ஜோபர்க், இக்கருத்தரங்கின் அமைப்பாளராகப் பணியாற்றுவார்.

# உற்பத்தி வரியைக் குறைக்க இயலாதாம்

### ஆலைகளுக்கு அதனால் இலாபமில்லையாம்

### டெல்லி அதிகாரி கூற்று

புதுடில்லி, அக். 28—

"மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்கு உதவியாக, ஆலைகளிடம் மத்திய அரசு வசூலிக்கும் உற்பத்தி வரியைக் குறைக்கவேண்டும்" என்று வற்புறுத்தப்பட்டுவருவது தெரிந்ததே.

இதுபற்றி மத்திய அரசின் வர்த்தகத் துறைச் செயலாளர் கூறியிருப்பதாவது :—

"ஆலைகளுக்கு விதிக்கப்படும் உற்பத்தி வரியைக் குறைக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை; வரியைக் குறைப்பதால் அரசின் வருமானம் குறையுமேயன்றி, ஆலைகளுக்கு அதனால் இலாபம் இல்லை."

# மருத்துவமனையில் ம. பொ. சிவஞானம்

### நெடுஞ்செழியன் சந்தித்து உடல்நலம் விசாரித்தார்

சென்னை, அக். 28—

வயிற்றுப் பிணிக்காக சென்னை பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்களை, அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சந்தித்து உடல்நலம் விசாரித்தார்.

### வாக்குப் பதிவு செய்தார்

சிகிச்சை பெற்றுவரும் ம. பொ. சிவஞானம் அவர்கள், மாநகராட்சித் தேர்தலில் தமது வாக்கைப் பதிவு செய்வதற்காக மருத்துவமனையிலிருந்து கார்மூலம் சென்று வாக்குப் பதிவு செய்துவிட்டு, மீண்டும் மருத்துவமனைக்குத் திரும்பிவிட்டார். வாக்குச் சாவடிக்கு அருகில் அவருடைய இல்லம் இருப்பினும், அவர் அங்கு செல்லவில்லை.

# நீக்ரோ தலைவர் நினைவாக அஞ்சல் தலை

புதுடில்லி, அக். 28—

அமெரிக்க நீக்ரோ மக்களின் உரிமைக்காகப் போராடிய வீரர் மார்ட்டின் லூதர் கிங்கின் நினைவாக ஒரு தனி அஞ்சல் தலை வெளியிடப்படும்.

நவம்பரிலேயே இந்த அஞ்சல் தலை வெளியிடுவதாக இருந்தது; அனைத்து நாட்டு நல்லுறவுக்காக டாக்டர் லூதர் கிங்குக்கு வழங்கப்பட்ட நேரு விருதைப் பெறுவதற்கு அவரது துணைவியார், சனவரித் திங்களில் டில்லிக்கு வருவதையொட்டி, இந்த அஞ்சல் தலை வெளியீட்டு விழாவும் சனவரித் திங்களுக்குத் தள்ளிவைக்கப்பட்டது.

# கேஸ்கரின் மதிப்பீடு!

பெங்களூர், அக். 24—

பயனுள்ள சிறந்த நூல்களை இந்திய மொழிகளில் வெளியிடுவதற்காக இந்திய அரசினால் அமைக்கப்பட்டுள்ள 'நேஷனல் புக் டிரஸ்ட்'டின் தலைவர் டாக்டர் பி. வி. கேஸ்கர் அண்மையில் பெங்களூர் வந்திருந்தபொழுது, அவரை அணுகிய செய்தி நிருபர்கள்,

"எந்த மொழியில் இன்றைக்குப் புத்தகங்களின் தேவை மிக அதிகமாகப் பெருகியுள்ளது?"

என்று வினவினர்.

அதற்கு விடையளித்த அவர், 'மலையாளத்திற்குத்தான் முதலிடம் தரவேண்டும்; அதற்கு அடுத்தபடியாகத் தமிழ், வங்காளம், மராட்டி, குசராத்தி மொழிகளைக் குறிப்பிடலாம்' என்று கூறினார்.

# விபரீத விளைவுகளுக்கு வித்திடுவதா?

## 'ஆங்கிலத்தைக் கைவிடுவது இயலாததாகும்'

### தலைமை நீதிமன்ற நீதிபதி வலியுறுத்தல்

ஐதராபாத், அக். 28—

"மொழிப் பிரச்சினை, சிக்கலான ஒன்றாகும்; இதைத் திடீரென்று தீர்த்துவிட இயலாது.

"சட்டம் சம்பந்தப்பட்ட வரையில், இதுவரையில், ஆங்கிலத்தின் மூலமே செயல்பட்டு வந்திருக்கிறோம்; அதற்கு ஒரு மாற்றுமொழி கண்டுபிடிக்காமல், உள்ளதை விட்டுவிடுவதென்பது விபரீதமான விளைவுகளுக்கு வித்திடுவதாகும்; அத்தகைய ஒரு மாற்றுமொழி கிடைக்கும் வரையில் --- நமக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் --- ஆங்கிலம்தான் தலைமை நீதிமன்றத்தின் மொழியாக இருக்கும்"

என்று இந்தியாவின் தலைமை நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. இதயத்துல்லா, ஆந்திர உயர் நீதிமன்றத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி வலியுறுத்தினார்.

# விளைபொருள் உற்பத்தியைப்பெருக்க

### பல பயிர் சாகுபடித் திட்டம்

புதுடில்லி, அக். 28—

இந்நாட்டின் விளைபொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்காக 1967—68-ல் பல பயிர் சாகுபடித் திட்டம் ஒன்று அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இதற்குக் குறியளவு 75-இலட்சம் ஏக்கராக நிர்ணயிக்கப்பட்டது.

1968—69-க்கு 1.5 கோடி ஏக்கராகக் குறியளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மாநில அரசுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறியளவு 1.36 கோடி ஏக்கராகும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்துக்குத் தற்காலிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள குறியளவு 4 கோடி ஏக்கராகும்; இதில் 3 கோடி ஏக்கர் பாசன வசதியுள்ள பகுதிகளிலும், மீதி ஒரு கோடி ஏக்கர், நிச்சயமாக மழையுள்ள பகுதிகளிலும் இருக்கும்.

# கிராமங்களில் மருத்துவப் பணி

### இரஷ்ய முறையைப் பின்பற்ற யோசனை

சென்னை, அக. 25—

சோவியத் இரஷ்யாவில், மருத்துவத் துறையில் ஓரளவே பயிற்சி பெற்ற 'பெல்ட்ஷெரர்'கள் என்பவர்களும் மக்களுக்குப் பணி செய்கிறார்கள்; இவர்கள் டாக்டர்கள் அல்லர்; ஆனால், இவர்கள் தங்கள் படிப்புக்கு ஏற்றவாறு 2½ அல்லது 3½ ஆண்டுகள் பயிற்சி பெற்ற நர்ஸ், சுகாதாரத் துப்புரவு போன்ற பணிகளைச் செய்கிறார்கள்.

"இதுபோன்ற ஒரு முறையை இந்தியாவிலும் அறிமுகம் செய்தால், கிராமப்புறப் பகுதிகளின் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்ய வசதியாக இருக்கும்"

என்று, முன்னாள் சர்ஜன்-ஜெனரல் டாக்டர் ஜே. சி. டேவிட் கூறினார்.

ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி வெள்ளி விழா நினைவுச் சொற்பொழிவை அவர் நிகழ்த்துகையில், மேலும் குறிப்பிட்டதாவது :—

"ஏறக்குறைய 100 பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரிகள் இருந்தும் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் மருத்துவ வசதி அளிக்க முடியவில்லை. அறுநூற்றுக்கு மேற்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களில் டாக்டர்களே இல்லை; பல மருத்துவமனைகளில் போதுமான அளவு மருத்துவர்கள் இல்லை."

சுகாதார அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்.

கல்லூரித் தலைவர் டாக்டர் ஏ. என். கே. மேனன் அனைவரையும் வரவேற்றார்.

# தெற்காசிய நாடுகளின் பொருளாதார அவலநிலை

### ஐ. நா. பேரவையில் இந்தியப் பிரதிநிதி கோரிக்கை

ஐ. நா., அக். 24—

"'இப்போதைய விகிதத்தில் தெற்கு ஆசியா, தன்னுடைய தனி நபர் வருமானத்தை இருமடங்காக அதிகரித்துக்கொள்ள 150 ஆண்டுகளாவது ஆகும்' என உலக பாங்கி கூறியிருக்கிறது.

"இப்பகுதியில் உள்ள மக்கள், தங்களுடைய வாழ்க்கை நிலைமையில் இந்த அளவு மாறுதலை அடைவதற்காக 150 ஆண்டுகள் காத்திருப்பர் என்று மெத்தனமாக இருப்பது அபாயமாகும்.

"இந்தக் காலத்தில் என்ன வேண்டுமானாலும் நடைபெறக்கூடும்; மாபெரும் தியாகத்திற்குப் பிறகு இப்பகுதியிலுள்ள பல நாடுகள் ஏற்படுத்த முயன்று வந்துள்ள சுதந்தர --- சனநாயக --- சமூக -- பொருளாதார முறைகளுக்கு முதலில் அபாயம் ஏற்படக்கூடும்.

"எனவே, பின்தங்கிய நாடுகளுக்கு வெளிநாட்டு உதவி வசதிகளை அதிகரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்"

என்று ஐ. நா. பொதுப் பேரவையின் பொருளாதாரக் குழுவில், இந்தியாவின் பிரதிநிதி ஜே. என். மேத்தா பேசுகையில் சுட்டிக் காட்டி வலியுறுத்தினார்.

# மனிதனுடன் கூடிய விண்வெளிக் கப்பல்

### பூமியைச் சுற்றிவர இரஷ்யா செலுத்தியது

மாஸ்கோ, அக். 28—

18 திங்களுக்குப் பிறகு இப்போது முதல் தடவையாக சோவியத் இரஷ்யா, மனிதனுடன் கூடிய விண்வெளிக் கப்பலை, பூமியைச் சுற்றி வருவதற்காக விண்வெளியில் செலுத்தியிருக்கிறது.

'சோயூஸ்-33' என்ற இந்த விண்வெளிக் கப்பல், விண்வெளியில் சென்று பூமியைச் சுற்றி வருவதாகவும், அதன் இணைப்புக் கருவிகள் அனைத்தும் நன்கு இயங்கிவருவதாகவும் செய்தி தரப்பட்டிருக்கிறது.

இந்த விண்வெளி விமானம் 13-வது தடவையாகப் பூமியைச் சுற்றி வியட்னாம்மீது பறந்து கொண்டிருக்கையில் விண்வெளி விமானி பெரிகோவி பூமிக்கு அனுப்பிய செய்தியில் கூறியதாவது :—

"அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக வீரமிக்க போராட்டம் நடத்திவரும் தீரமிக்க வியட்னாம் மக்களுக்கு என்னுடைய நல்வாழ்த்துக்கள்."

## வீரப்பன்சத்திரத்தில் கருணாநிதி மன்றத் துவக்க விழா

வீரப்பன்சத்திரத்தில் மு. கருணாநிதி மன்றத் துவக்க விழா, 12—10—68 அன்று அ. நாட்டராயன் தலைமையில் நடைபெற்றது.

நடிகமணி டி. வி. நாராயணசாமி, மன்றத்தைத் திறந்துவைத்துத் தமிழக அரசின் சாதனைகளை விளக்கிப் பேசினார்.

மற்றும் ஈரோடு வட்டச் செயலாளர் இரா. சென்னியப்பன், வட்டத் துணைச் செயலாளர் கி மதிவாணன், ஈரோடு நகரச் செயலாளர் ப. ச. விஸ்வநாதன், பவானி வட்டத் துணைச் செயலாளர் இரா. செங்குட்டுவன், டாக்டர் சேது பாஸ்கரன், சிவ. நடராசன் ஆகியோரும் பேசினர்.

வீரப்பன்சத்திரத்திற்குக் காவிரியிலிருந்து குடிநீர் கொண்டுவந்து பொதுமக்களுக்கு வழங்குமாறும், வீரப்பன்சத்திரத்திலிருந்து அக்கிரகாரம் செல்லும் சாலையில் நகரப் பேருந்து செல்வதால் அந்தச் சாலையை தார்ச் சாலையாக்க வேண்டியும், ஈரோடுக்கும்—சென்னைக்கும் இரவு நேரப் பேருந்து ஒன்று பொதுமக்கள் -- வியாபாரிகள் வசதிக்காக விடுமாறு கோரியும், வீரப்பன்சத்திரம் வழியாகப் புகைவண்டி நிலையம், மருத்துவமனை, வாரச் சந்தை, சி. என். எம். கல்லூரி, பி. பி. அக்கிரகாரம் ஆகிய இடங்களுக்குச் செல்ல நகரப் பேருந்து விடவேண்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு நகல் அனுப்பப்பட்டுள்ளது.

# வெளிநாட்டில் எவ்வளவு காலத்துக்கு கையேந்திக் கொண்டிருப்பது?

## சொந்தமாக அந்நியச் செலாவணி ஈட்ட வழி என்ன?

### இந்தியாவுக்கு அமெரிக்கத் தூதுவர் கூறும் யோசனை

இந்தியாவில் அமெரிக்கத் தூதுவராக இருக்கும் திரு. செஸ்டர் பவுல்ஸ், 'இந்தியா எப்போதுமே அந்நிய உதவியை நாடிக்கொண்டிருக்க இயலாது' என்பதைச் சுட்டிக்காட்டி, தேவையான அந்நியச் செலாவணியை இந்தியாவே சொந்தமாக ஈட்டிக்கொள்ள வழிவகைகளைக் கூறியிருக்கிறார்; அவர் எழுதியுள்ள கட்டுரையொன்றில் தெரிவித்துள்ளதாவது:—

இந்தியா முதலிய வளரும் நாடுகளுக்கு அமெரிக்கா அளித்து வரும் பொருளாதார அந்நியச் செலாவணி உதவி, வரும் ஆண்டில் கணிசமாகக் குறையும்.

இந்தியாவின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு ஏன் இந்த அந்நியச் செலாவணி இவ்வளவு அவசரத் தேவையாக இருக்கிறது?

பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், சாலைகள் முதலியன அமைப்பதற்கு அந்நியச் செலாவணி தேவையில்லை; ரூபாய்ச் செலவுதான். ரூபாய்ச் செலாவணியை இந்திய அரசு, உள்நாட்டு வரி விதிப்பின் மூலம் திரட்டிக் கொள்கிறது.

ஆயினும், பொருளாதாரம் விரைந்து வளர இந்தியா சில மூலப் பொருள்களையும், இயந்திரங்களையும், இரசாயன உரம் முதலியவற்றையும் இறக்குமதி செய்தாக வேண்டும்; இவை பெரும்பாலும் முன்னேற்றம் அடைந்த நாடுகளில்தான் கிடைக்கின்றன.

இவற்றை உற்பத்தி செய்து விற்கும் வெளிநாட்டவர்களுக்கு இவற்றுக்குரிய விலையை டாலர், பவுன், மார்க், பிராங்க், யென் முதலிய அந்நியச் செலாவணியில்தான் தரவேண்டும்; அப்பொழுதுதான் இப்பணத்தை அவர்கள் உலக மார்க்கெட்டில் செலவழிக்க முடியும்

இந்த அந்நியச் செலாவணி கிடைப்பதற்கு இந்தியா என்னென்ன செய்யலாம்:—

**இறக்குமதிக்கு மாற்று:**—இன்று இந்தியா அந்நியச் செலாவணி கொடுத்து வெளிநாடுகளில் வாங்க வேண்டியிருக்கும் பல பண்டங்களுக்கும், சரக்குகளுக்கும், மாற்றுப் பொருள்களை உருவாக்கிக் கொள்ளலாம்.

சென்ற ஆண்டில் உலக மார்க்கெட்டுகளில், இந்தியா, ஒரு கோடி டன்னுக்குமேல் 'குரூட் ஆயில்' பொருட்களை வாங்க வேண்டியதாயிற்று; ஆன செலவு ரூ. 74.755 கோடி.

ரூ. 235.8 கோடிக்கு இரும்புக் கலப்பற்ற உலோகங்களும், பாஸ்பேட் கல்லும் வாங்க வேண்டியதாயிற்று.

மேலும், இந்தியாவில் ஏற்கனவே இயங்கிவரும் இயந்திரங்களுக்குரிய பல மாற்று உறுப்புகளும் வெளிநாடுகளிலிருந்து வாங்கியாக வேண்டும்.

இறக்குமதிகளுக்கு மாற்றுக் கண்டுபிடிப்பதில் இந்தியா கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளது; இரயில் வண்டிப் பெட்டிகள், இரயில் எஞ்சின்கள், கனமான மின்விசை உற்பத்தி இயந்திரங்கள், மண் வாரி இயந்திரங்கள், லாரிகள், ஜீப்புகள் முதலியன முன்பு வெளிநாடுகளிலிருந்து வாங்கியவை -- இன்று இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகின்றன.

இந்திய நிபுணர்கள் வெளிநாட்டுத் தொழில் நுட்ப நிபுணர்களுடன் சேர்ந்து இந்தியாவிலேயே இரும்புக் கலப்பற்ற உலோகங்களும், பெட்ரோலியமும் எங்கு கிடைக்கும் என்று அவசர உணர்வோடு ஆராய்ந்து வருகிறார்கள்; முயற்சி வெற்றி காணும் சிறந்த வாய்ப்பு இருக்கிறது.

**ஏற்றுமதிகள்:**— மற்ற எல்லா நாடுகளையும் போலவே இந்தியாவும் தன் உற்பத்திப் பண்டங்களை உலக மார்க்கெட்டுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் தன்னுடைய இன்றியமையாத இறக்குமதிகளுக்கு வேண்டிய அந்நியச் செலாவணியில் பெரும் பகுதியையும் தேடிக் கொள்ள முயலுகிறது. வரன்முறையாக, தேயிலையும் சணலுமே இந்தியாவின் முக்கிய ஏற்றுமதிகளாக உள்ளன. அண்மையில் துணி, மருந்து முதலிய தொழில் உற்பத்திப் பண்டங்கள் சிலவும் ஏற்றுமதியாகி வருகின்றன. சென்ற இரண்டு--மூன்று ஆண்டுகளில் வெளிநாடுகளில் விற்கும் வேறு சில இந்தியப் பண்டங்களின் அளவும் மிகவும் கூடியுள்ளது.

**சுற்றுலா:**— வெளிநாட்டுச் சுற்றுலாக்காரர்கள் இன்னும், அதிகமாக வந்துபோகும்படி ஊக்கமூட்டுவதன் மூலம் இந்தியா இன்னும் அதிகமாக அந்நியச் செலாவணி தேடிக் கொள்ளமுடியும். வெளிநாட்டுச் சுற்றுலாக்காரர்கள் செலவழிக்கும் பணம் அந்நியச் செலாவணியாகக் கிடைக்கிறது; இது இறக்குமதிகளுக்குச் செலவு செய்ய உதவும்.

கிரீஸ், போர்ச்சுகல், யூகோஸ்லாவியா, தாய்லாந்து முதலிய சின்னச் சின்ன நாடுகளுக்குச் செல்லும் சுற்றுலாக்காரர்களில் ஒரு சிறு பகுதியினர்தான் இப்போது இந்தியாவுக்கு வருகிறார்கள்; ஸ்பெயின் நாட்டுக்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணியில் நூற்றுக்கு 43 பங்கு சுற்றுலாக்காரர்களால் வருவதே; இந்தியாவிலோ இது நூற்றுக்கு 2 3 பங்குதான்.

விடுதிகள் கட்டிவைத்தும், புதிய விமான நிலையங்கள் அமைத்து வைத்தும், சிறந்த உள்நாட்டுப் போக்குவரத்து--நவீன விற்பனை நிலையங்கள்--துப்புரவு வசதிகள் ஆகியவற்றை உருவாக்கியும், நன்கு பயிற்சி பெற்ற வழிகாட்டிகளை ஏற்படுத்தியும் ஊக்கமானதொரு திட்டம் வகுத்து முயற்சி செய்தால், இந்தியாவின் வளர்ச்சிக்கு வேண்டிய அந்நியச் செலாவணிக்குச் சுற்றுலாத் தொழில் ஒரு பெரிய வருவாயாக அமையும்.

**கடன்களும் மானியங்களும்:**— அமெரிக்கா முதலிய முன்னேறிய நாடுகளிடமிருந்து கடன்கள், மானியங்கள் வாங்கியும் இந்தியா தொடர்ந்து அந்நியச் செலாவணி பெற்றுவர முடியும். இந்தியா விரைந்து வளர்ச்சி அடைவதற்காக 1951 முதல் இந்திய அரசுக்கு அமெரிக்கா கடனாகவும் மானியமாகவும் ரூ. 6,450 கோடி வழங்கியுள்ளது; இது, இந்தியாவுக்கு உலகம் முழுவதிலுமிருந்து கிடைத்துள்ள அந்நிய உதவியில் நூற்றுக்கு 60 பங்காகும்.

நான் மேலே குறிப்பிட்ட காரணங்களினால், 1969-ல் அமெரிக்க உதவி குறைந்தாலும்கூட, இந்தியாவுக்கு வேறு எந்த நாடு வழங்கும் அந்நியச் செலாவணியையும்விட அமெரிக்கா வழங்குவதே இன்னும் மிக அதிகமாக இருக்கும்.

**உலக பாங்கி:**—உலக பாங்கியிலிருந்து கடன் வாங்குவதன் மூலமும் இந்தியா அந்நியச் செலாவணி பெறலாம்.

**வெளிநாட்டுத் தனியார் முதலீடு:**—கடைசியாக, இந்தியாவில் வெளிநாட்டுத் தனியார் முதலீடு செய்வதும் அந்நியச் செலாவணி கிடைக்க ஒரு வழியாகும். வெளிநாட்டுத் தொழிலதிபர்கள் இந்தியாவில் தொழிற்சாலைகளை நிறுவ இணங்கும்போது, இந்தியர்களுக்கு அவற்றால் வேலை வாய்ப்பு கூடுவதோடு, இந்தியாவின் உள்நாட்டுச் செலவுக்கும், வெளிநாட்டு மார்க்கெட்டுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் மேற்கொண்டு நிதி கிடைக்கிறது.

அமெரிக்கா, ஜெர்மனி, இத்தாலி, பிரிட்டன், ஜப்பான் முதலிய தொழில் வளம் படைத்த நாடுகளிலுள்ள தொழிலதிபர்கள் வெளிநாடுகளில் முதலீடு செய்வதற்கு வைத்திருக்கும் மூலதனத்தில் ஒரு சிறு பகுதிதான் இன்று இந்தியாவுக்குக் கிடைத்துவருகிறது. அந்த மூலதனம் இந்த நாட்டுக்குக் கிடைத்து, அதனால் இந்தியப் பொருளாதாரம் நன்மையடையுமாறு அதை இங்கு கவர்ந்து இழுப்பது எப்படி என்பதுதான் இந்தியாவின் பிரச்சினை.

# வேளாண்மை பெருக

## அமெரிக்கா புரிந்த சாதனை

அமெரிக்காவில் வேளாண்மை ஒரு தொழில் போலவேதான் நடத்தப்படுகிறது; இதில் வெற்றிபெற முடியாதவர்கள், பிற தொழில்களைப்போலவே வெளியேறிவிட வேண்டியதுதான். வெற்றிபெறக் கூடியவர்களுக்கு அவர்கள் இடங்கொடுத்து ஒதுங்கிவிட வேண்டும்.

இந்த நிலையும், விவசாயிகளின் தன்னம்பிக்கையும், எளிதில் கடன் பெறக்கூடிய வசதியும், விலை உறுதியும், அமெரிக்க வேளாண்மை வெற்றி பெறுவதற்குக் காரணங்களாகும்.

அமெரிக்காவில், விவசாயம் தொழில் முறைப்படி நடத்தப்படுவதன் விளைவாக சென்ற 14 ஆண்டுகளில் பண்ணைகளின் பரப்பு பெருகியுள்ளது. முன்பு சராசரி 150 ஏக்கர் பரப்புக்கொண்டிருந்தது ஒரு பண்ணை; இப்பொழுது சராசரி பண்ணை ஒன்றின் பரப்பு 350 ஏக்கர்.

முன்பு பண்ணையில் வாழ்ந்த மக்கள் தொகை 17 சதவிகிதம்; அது இப்பொழுது 8 சதவீதமாகக் குறைந்துவிட்டது.

பண்ணை வருமானங்கள் இந்தப் பதினான்கு ஆண்டுக் காலத்தில் இரட்டிப்பாகியுள்ளன. பண்ணை விளைச்சல் 30 சதவிகிதம் உயர்ந்துள்ளது. இரசாயன உரம், பூச்சிக் கொல்லி மருந்துகள் முதலியவற்றின் விலை 30 முதல் 40 சதவிகிதம் வரை உயர்ந்திருக்கின்றது.

ஆனால் பண்ணைப் பொருள்களின் விலை குறிப்பிடத்தக்கவகையில் ஏறவில்லை; பார்க்கப் போனால், இந்த 14 ஆண்டுக் காலத்தில் விலைகள் கீழ்நோக்கியிருந்திருக்கின்றன.

அமெரிக்க விவசாயி ஒருவர் தமது மனைவியுடன் 350 ஏக்கர் பண்ணையை வெளி உதவி ஏதுமின்றி நிர்வாகம் செய்கிறார்; அவர்தான் நிலச்சுவான்தார் -- அவர்தான் குடியானவர் -- அவர்தான் வேலையாள் -- மூவரும் அவர் ஒருவரே; அறுவடையின்போது மட்டும் சில வேலையாட்களைச் சமபளத்துக்கு அமர்த்திக்கொள்கிறார்; பிற வேளைகளில் அவரே எல்லா வேலைகளையும் செய்துகொள்கிறார்; கடுமையாக உழைக்கிறார்; பலப் பல இயந்திரங்களைப் பயன்படுத்துகிறார்.

அமெரிக்கப் பொருளாதாரம் முழுவதற்கும் இருப்பதைப் போலவே அமெரிக்க வேளாண்மைக்கும் கடன் வசதிதான் முக்கிய ஆதாரம்போல் காணப்படுகிறது. தமது பண்ணைப் பணிகள் அனைத்துக்கும் அமெரிக்க விவசாயி கடன்பெற முடிகிறது. விதைகள், இரசாயன உரம் வாங்குவதற்கும் இயந்திரங்கள் வாங்குவதற்குத் தேவையான பெரும் முதலீடுகளுக்கும் அவருக்குக் கடன் கிடைக்கிறது; எனவே, தங்குதடைகள் இன்றி விவசாயிக்குத் தமது பண்ணையில் சாகுபடி செய்ய முடிகிறது; அதிக விளைச்சல் கிட்டுவதால் கடனை அவர் அடைத்துவிட முடிகிறது.

பாங்கிகளும், கருவிகள் தயாரிப்பாளர்களும், பணி நிலையங்களும் பெரும்பாலும் இக்கடன்களை வழங்குகின்றன.

கோதுமை, மைலோ, பருத்தி, சோயா மொச்சை போன்ற முக்கிய பயிர்களுக்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த விலைக்குக் கீழ் நடப்பு விலை விழுந்துவிட்டால், விவசாயி தமது விளைபொருளை அரசுக்கு விற்கலாம். இத்தகைய விலை ஆதரவுத் திட்டமானது விவசாயிக்குக் கட்டுப்படியாகும் விலையை உறுதி செய்கிறது. ஆனால் சென்ற மூன்று ஆண்டுகளில் இந்த ஏற்பாட்டினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை இல்லாமல் போயிற்று; ஏனெனில், நடப்பு விலை எப்பொழுதுமே 20 முதல் 30 சதவிகிதம், ஆதரவு விலையைவிட அதிகமாகவே இருந்துவந்திருக்கிறது.

## சென்னை 14-வது வட்ட நாவலர் மன்றத் தேர்தல் பணி

சென்னை 14-வது வட்டம் நாவலர் மன்றத்தின் சார்பில் திரு. ஆர். சங்கரலிங்கம் தலைமையில் மா. இராசன், பி. ஏ. கணபதி, கே. பி. தூயமணி, எஸ். பால்ராசு, டி. முத்து, மாணிக்கம் மற்றும் கழக உறுப்பினர்கள் 114-வது வட்ட வேட்பாளர் சா. கணேசனையும், 113-வது வட்ட வேட்பாளர் சோ. கி. மூர்த்தியையும் ஆதரித்து தனி மோட்டார் வானில் ஒலிபெருக்கி வைத்துக்கொண்டு மாநகராட்சியின் சாதனைகளையும், கழக ஆட்சியின் சாதனைகளையும் விளக்கித் தெருத் தெருவாக பிரச்சாரம் செய்தனர்.

23—10—68 முதல் 25—10—68 வரை இந்தப் பிரசாரப் பணியில் ஈடுபட்டு கழக வெற்றிக்குத் துணை புரிந்தனர்.

# உலகிலேயே விலை மதிப்புள்ள பொருள்!

## ஓர் இராத்தல் 45,000 கோடி டாலர்!

நியூயார்க், அக். 26—

மருத்துவம், கனி வளம் அகழ்ந்தெடுத்தல், தொழில் ஆகிய துறைகளுக்கு ஒப்பற்ற பயனுள்ள --- வரம்பில்லாத ஆற்றலுள்ள அரிய அணுப் பொருள் ஒன்றை அமெரிக்கா முதல் தடவையாக விற்பனை செய்யப் போகிறது. மனிதன் படைத்த பொருள் இது!

'கலிபோர்னியம்-252' என்பது, கிடைத்தற்கு அரிய இந்தப் பொருளின் பெயர்.

ஓர் இராத்தல் (454 கிராம்) விலை 45,000 கோடி டாலர்; எனினும் ஆண்டுக்கு ஒரு கிராம்வீதம் இதை உற்பத்தி செய்யக்கூடிய நிலையை அடையச் சில ஆண்டுகளாகும்; எனவே, முதலில் ஒரு மைக்ரோ கிராம் எடையில் பத்தில் ஒரு பங்கு (ஒரு கிராமில் ஒரு கோடியில் ஒரு பங்கு மைக்ரோகிராம்) 100 டாலர் வீதம் விற்பனை செய்யப்படும்.

இது, மனிதன் படைத்த ஒரு 'ஐசட்டோப்பு' -- இது இயற்கையில் கிடைப்பதில்லை; மற்றக் கதிரியக்க 'ஐசடோப்பு'கள்போல், இதுவும் அணு உலையில் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்தப் புதிய பொருள் உற்பத்தி செய்யும் கதிரியக்கம், புற்று நோய் மருத்துவத்திற்குப் பெரிதும் பயன்படும்; புற்று இருக்குமிடத்தில் புதிய அணுப் பொருளைச் செருகி வைக்கமுடியும். இதனால் நியூட்ரான் ஒளிக் கற்றைகளைப் பயன்படுத்துவதிலுள்ள பெரிய இடையூறு ஒன்றைத் தவிர்க்க முடியும்.

மிக மெல்லிய கம்பியில் மின்விசை முறையில் இப்பொருளைத் தேக்கிவைக்க முடியும்; வேண்டிய அளவுக்கு இந்தக் கம்பியைக் கத்தரித்து, எந்த வடிவத்தில் வேண்டுமானாலும் வளைத்து, புற்று நோய் பிடித்த திசுக்களுக்குள் புகுத்த முடியும்.

புதிய பொருளின் அரும் பெரும் பயன்களில் மிகப் பெரியது -- ஒருவேளை --- இவ்வாறு கதிரியக்கம் விளைவிக்கும் சாதனமாக அதைப் பயன்படுத்துவதாகவே இருக்கலாம்.

# ஆள் இல்லாமல் இயங்கும் கப்பல்

சரக்குக் கப்பல் தானே இயங்குவதற்கு 'கம்ப்யூட்டரை'ப் பயன்படுத்தப் போகிறார்கள், பிரிட்டிஷ் நிறுவனத்தின் கப்பல் பிரிவு ஒன்று இதற்கான முயற்சிகளில் வெற்றி பெற்றிருக்கிறது.

## கீல் வாதத்துக்குச் சிகிச்சை

### மருத்துவ நிபுணரின் ஆராய்ச்சி

மூட்டுக்கு மூட்டு வரும் வாத நோய், கீல்வாத நோயாக அழைக்கப்படுகிறது.

எலும்புகள் இணையும் மூட்டுக்களில் உராய்வு ஏற்பட்டாலும் பாதிக்காதிருக்க ஒருவகை நீர் -- பிசின் போன்றது -- இயற்கையாகச் சுரக்கிறது. எக்காரணம் பற்றியேனும் இந்த நீர் சுரப்பது குறைந்தாலோ அல்லது நின்றாலோ அசைவு ஏற்படும்போது மூட்டுக்களில் வலி ஏற்படுகிறது.

இப்படி குறைந்துவிடும் அல்லது நின்றுவிடும் நீருக்குப் பதிலாக உராய்வு ஏற்பட்டாலும் வலி இல்லாமல் தடுக்க செயற்கை திரவத்தைப் பயன்படுத்துவதற்கான ஆராய்ச்சிகள் இப்போது பிரிட்டனில் நடைபெற்றுவருகிறது.

முதிர்ந்த நிலையில் உள்ள இந்தச் சோதனைமூலம் இலட்சக்கணக்கானவர்கள் பயன்பெறுவார்கள்.

# மருத்துவக் கல்லூரி இடங்களைக் குறைக்கக் கோரிக்கை

## டாக்டர்கள் தொகை பெருகினால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும் என எச்சரிக்கை

### தமிழக மருத்துவத்துறை மாநாட்டில் தீர்மானம்

தஞ்சாவூர், அக். 27—

"மருத்துவப் பட்டதாரிகளை அதிகப்படுத்திக் கொண்டே போனால், இறுதியில் பொறியியல் பட்டதாரிகட்கு ஏற்பட்ட கதிதான் ஏற்படும்"

என்று, தமிழக மருத்துவத் துறை மாநாடு எச்சரிக்கை செய்திருக்கிறது.

இன்று இங்கு முடிவடைந்த இந்த மாநாட்டில், மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப் படுவோரின் தொகையைப் பாதியாகக் குறைக்குமாறு அரசினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

"டாக்டர்களின் எண்ணிக்கை நாட்டின் மருத்துவத் தேவையைப் பொறுத்தது மட்டுமல்ல -- எந்த அளவுக்கு மக்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதையும் பொறுத்ததாகும்"

என்று மாநாடு சுட்டிக்காட்டியுள்ளது

மருத்துவக் கல்லூரிகளில் பயிற்று மொழியாக வட்டார மொழியைக் கொண்டுவரும் திட்டத்தை மெதுவாகச் செயல்படுத்துமாறு மத்திய -- மாநில அரசுகளை மாநாடு கேட்டுக்கொண்டது.

"பயிற்று மொழி மாற்றம் மெதுவாக நடைபெறுவது, தேசிய ஒருமைப்பாட்டுக்கும், விஞ்ஞான முன்னேற்றத்துக்கும் நலம் பயக்கும்" என்று மாநாடு கருத்தறிவித்துள்ளது.

மருத்துவர்களின் ஊதிய விகிதங்களையும், ஊழிய முறைகளையும் மேம்படுத்துமாறும் மாநாடு அரசினரைக் கேட்டுக்கொண்டது

இந்த மாநாட்டில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஏராளமான டாக்டர்கள் கலந்து கொண்டனர்.

# காங்கிரசு ஏட்டின் விஷமச் செய்தி

## புதுவை மாவட்டச் செயலாளர் மறுப்பு

புதுவை, அக். 26—

"புதுவை முன்னாள் முதலமைச்சர் திரு. பருக் மரைக்காயரை திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்த்துக்கொண்டதற்கு புதுவை மாவட்ட தி. மு. க. எதிர்ப்புத் தெரிவித்துச் சுற்றறிக்கை வெளியிட்டிருப்பதாகக் காங்கிரசு ஏடான 'நவசக்தி' யில் செய்தி வெளியாகியிருப்பது என் கவனத்துக்குக் கொண்டுவரப்பது.

"திரு. பருக் மரைக்காயரை கழகத்தில் சேர்த்ததுபற்றி புதுவை மாவட்டக் கழகச் சார்பில் அறிக்கைமூலமோ நேரிலோ எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கப் படவில்லை.

"தலைமைக் கழகம் செய்த ஒரு முடிவை எதிர்த்து சுற்றறிக்கை விடுக்கின்ற அளவுக்குப் புதுவை மாவட்டக் கழகம் எப்போதுமே செயல்படாது என்பதை, 'மாவட்டக் கழகச் செயலாளர்' என்ற முறையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

"விஷமத்தனமாகச் செய்தி வெளியிட்டிருக்கும் அந்தக் காங்கிரசு ஏட்டின் செயலை வன்மையாகக் கண்டிப்பதுடன், தவறான செய்தி வெளியிட்டமைக்காக அந்த ஏடு வருத்தம் தெரிவிக்க வேண்டும்; இல்லையேல் அதன் மீது முறைப்படி தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்"

என்று, புதுவை மாவட்ட தி. மு. க. செயலாளர் எம். ஏ. சண்முகம் தெரிவித்துக்கொள்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு ... அச்சகத்தில் (24, ... தெரு, சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# விவசாயிகளுக்கு ரூ. 1-கோடி

## இராமநாதபுரம் மாவட்டத்தில் கடன் வசதி

சிவகங்கை, அக். 28—

"விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ. 1 கோடி அனுமதிக்கப்பட்டிருக்கிறது" என மாவட்டக் கலெக்டர் ஷெட்டி கூறினார்.

திருவரங்கம் கிராமத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் விழாவில் கலெக்டர் திரு. ஷெட்டி பேசுகையில், 'குறை தீர்க்கும் நாள்' என்றிருப்பதை, 'குறை கேட்கும் நாள்' என்று மாற்றவேண்டும்' என்றார்

மின்சார வசதி கிடைக்கவில்லை என்ற காரணத்தினால், விவசாயம் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறுவதைக் கேட்டுத் தாம் மிகவும் வருந்துவதாகக் கூறினார்,

மின்சாரத்திற்காகக் கோடிக் கணக்கில் பணம் ஒதுக்கியும் மின்சாரம் கிடைக்கவில்லை என்பதைக் கேட்டும், '10 ஆண்டுகளாக உழுது வந்தும் இன்னும் 'பட்டா' கிடைக்கவில்லை' என்ற புகார் பற்றியும் மிக வருந்தினார்.

இது தொடர்பாக தாசில்தார்களும், ரெவினியூ இன்ஸ்பெக்டர்களும் அக்கறை காட்டி உடனடியாகப் 'பட்டா'க்களை மாற்றிக் கொடுக்க வேண்டும் என்றும், மாற்றினால்தான் விவசாயிகள் கடன் வாங்க முடியும் என்றும் கலெக்டர் கூறினார்.

"இராமநாதபுரம் மாவட்டத்திற்கு கலப்பு உரங்களுக்கு ரூ. 6 இலட்சம் கிடைத்திருக்கிறது" என்றும் கூறினார்.

# அறிஞர் அண்ணா சென்னை புறப்பாடு

## அக். 31-க்குப் பிறகுதான்

நியூயார்க், அக். 28—

அறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்காவிலிருந்து சென்னை திரும்பும் நாள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

நவம்பர் 2-ம் நாள் சென்னை திரும்புவார் என்ற பத்திரிகை செய்தி சரியல்ல; 'அக். 31-ம் நாள்வரை நியூயார்க்கிலேயே தங்கியிருக்க வேண்டும்' என்று டாக்டர் மில்லர் கூறியிருப்பதால், அக். 31-க்குப் பிறகுதான் நியூயார்க்கை விட்டுப் புறப்பட வேண்டும்.

விமானப் பயணத்திற்கு இரு நாட்களும், இடைவழியில் தங்கி இளைப்பாற இரண்டு நாட்களும் தேவைப்படுமாகையால், எப்படியும் நவம்பர் முதல் வார இறுதியில்தான் அண்ணா அவர்கள் சென்னைவந்துசேரக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நியூயார்க்கை விட்டு அண்ணா அவர்கள் புறப்படும் நாள் இன்னும் இரண்டொரு நாட்களில் உறுதியாக முடிவு செய்யப்படும்,

அமைச்சர்

# சத்தியவாணிமுத்து வெளிநாடு பயணம்

## விமான நிலையத்தில் சிறப்பான வழியனுப்பு

சென்னை, அக். 27—

தமிழகத் தாழ்த்தப்பட்டோர் நல -- செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, இன்று தமது வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார்.

மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து பிற்பகல் 2-35 மணிக்கு விமானத்தில் பயணமான அவருக்கு, சிறப்பான வழியனுப்பு நடத்தப்பட்டது.

விமான நிலையத்தில் உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், கழக அமைப்புச் செயலாளர் திரு. என்.வி நடராசன் எம்.எல்.சி., ஏ. வி. பி. ஆசைத்தம்பி, மற்றும் ஏராளமான கழகத் தோழர்கள் மாலையணிவித்து வழியனுப்பிவைத்தனர்.

பிரிட்டன், பிரான்சு ஆகிய நாடுகளின் அழைப்பை ஏற்று அங்கு செல்லும் திருமதி சத்தியவாணி முத்து, சுவிட்சர்லாந்து, மேற்கு ஜெர்மனி, ஹாலந்து, இத்தாலி, எகிப்து, லெபனான் ஆகிய நாடுகளிலும் சுற்றுப்பயணம் செய்துவிட்டு, நவம்பர் 25-ம் நாள் சென்னை திரும்புவார்.

# கிழக்கு இராமநாதபுரம் வளர்ச்சிக்கான திட்டம்

## ரூ. 5 கோடி செலவில் வைகை நதி சீரமைப்பு

சிவகங்கை, அக். 28—

"கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் பயன்பெற ரூ. 5-கோடி செலவில் வைகை சீரமைப்புத் திட்டம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது"

என்று இராமநாதபுரம் மாவட்டக் கலெக்டர், முதுகுளத்தூரில் செய்தியாளர்களிடத்தில் தெரிவித்தார்.

இத்திட்டத்தினால் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் பயன்பெறும் என்றும் இந்தத் திட்டத்திற்கான வேலை தொடங்கிவிட்டது என்றும் தெரிவித்தார். இந்த ஆண்டு இதற்கு ரூ. 10 இலட்சம் செலவு செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறினார்.

கலெக்டர் மேலும் கூறுகையில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மூன்று புதிய பஸ் ரூட்டுக்கள் கீழ்க் கண்ட ஊர்களுக்கு அனுமதிக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்:—

சிவகங்கையிலிருந்து இளையாங்குடி, பரமக்குடி, சத்திரக்குடி வழியாக இராமநாதபுரத்திற்குப் புதிய பஸ் ரூட்டும்; சிவகங்கையிலிருந்து மேலவெள்ளூர் வழியாக மதுரை மாவட்டம் மேலூருக்கு ஒரு புதிய பஸ் ரூட்டும்; சிவகங்கையிலிருந்து திருப்பத்தூர், குன்றக்குடி, காரைக்குடி வழியாக புதுவயலுக்கு ஒரு பஸ் ரூட்டும் அனுமதிக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்.

# சிறிய விவசாயிகள் பிரச்சினை

## திட்டக் குழு ஆராயுமாம்

திருச்சி, அக். 28—

தமிழ் நாட்டில் தஞ்சை, திருச்சி, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் உள்ள சிறிய விவசாயிகள் --- குறிப்பாக 8-ஏக்கரும் அதற்குக் குறைவாகவும் நிலம் வைத்திருப்பவர்களின் பிரச்சினைகளை ஆராயும் திட்டமொன்றைத் திட்டக் குழு மேற்கொண்டிருக்கிறது.

## நீத்தார் நினைவு

திருச்சி வட்ட தி மு.க அவைத் தலைவர் திருப்பராய்த்துறை டி. என். வையாளி அவர்களின் தந்தையார் திரு. நெகிழ்நாச்சி இயற்கையெய்தியதையொட்டி அக். 30-ந் தேதி காலை நீத்தார் நினைவு நிகழ்ச்சி நடைபெறும்.

# படி அரிசித் திட்டத்தால் விலைகள் குறைந்தன

## பருப்பு விலையைக் குறைக்க அரசு எடுத்த முயற்சி வெற்றி

### குடும்பப் பெண்கள் கூட்டுறவுப் பண்டகசாலை விழாவில் விளக்கம்

சென்னை நகரில் தற்போது குடும்பப் பெண்களால் நடத்தப்பட்டு வருகிற பன்னிரண்டு கூட்டுறவு பண்டக சாலைகளின் இரண்டாவது ஆண்டு விழா, இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.

அமைச்சர் கே. ஏ. மதியழகன் தலைமை தாங்கினார்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து, சட்ட அமைச்சர் செ. மாதவன் ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.

டாக்டர் திருமதி ரஹ்மதுன்னிசா பேகம் தமது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:—

"முந்தைய அரசினரால் பரிசோதனைக்குரிய திட்டமாகத் துவக்கப்பட்ட இந்தப் பண்டக சாலைகள், தற்போதைய அரசு கடைபிடித்து வருகிற கொள்கை காரணமாக வெற்றிகரமாக இயங்கி வருகின்றன.

பருப்பு வகைகளின் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த இந்த அரசு மேற்கொண்ட முயற்சிகள் நல்ல பலன் அளித்துள்ளன என்பதையும் ரூபாய்க்குப் படி அரிசி போடுவதென்ற இந்த அரசின் நடவடிக்கையும் விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த உதவுவதாக உள்ளது என்பதையும் நாம் நன்கறிவோம்.

தட்டுப்பாடான பொருள்களை அரசினரிடமிருந்து நேரே பெற்று நுகர்வோருக்கு வழங்குவதிலும் இப்பண்டக சாலைகள் வெற்றி பெற்றுள்ளன."

செல்வி வர்கீஸ் அறிக்கை படித்தார்; 'நகரில் உள்ள இத்தகைய கூட்டுறவுப் பண்டக சாலைகள் பன்னிரண்டு; இவற்றில் கடந்த ஓராண்டில் ஏற்பட்ட மொத்த வியாபாரம் ரூ 33,31,000 பெறுமானதாகும்' என்று அவர் தெரிவித்தார்.

"இந்தப் பண்டகசாலைகளுக்கு அருகில் உள்ள தனியார் கடைகளில் விலைகள் இறக்கப்பட்டுள்ளன; இந்தப் பண்டகசாலைகளால் ஏற்படுகிற நல்ல விளைவுகளில் இது ஒன்றாகும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சத்தியவாணி முத்து

விழாவைத் தொடங்கிவைத்து மாநில மாதர் நலத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கிடைப்பதற்கரிதாக உள்ள பொருள்களைக் கிடைக்கச் செய்வதிலும் அப்படிக் கிடைக்கின்ற பொருள்கள் கட்டுப்பாட்டு விலைக்குக் கிடைக்கச் செய்வதிலும் இச்சங்கங்கள் நல்ல வெற்றிபெற்றுள்ளதால் தாய்மார்கள் இவற்றை வரவேற்கின்றனர்.

மகளிராகச் சேர்ந்து நடத்தும் நிர்வாகமும் ஒன்றாகவே நடைபெற்று வரும். தவறுகள் இருக்காது.

சங்கங்களின் நோக்கம் நன்கு நிறைவேறவேண்டும். மேலும் பொருள்களின் விலை குறைக்கப் படவேண்டும். இச்சங்கம் மேலும் பல ஆண்டு விழாக்களை நடத்தவேண்டும்."

## கே. ஏ. மதியழகன்

உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் பேசுகையில் கூறியதாவது:—

"விலைவாசி கட்டுப்படவேண்டும். பொருள்கள் நியாயமான விலையிலும் தாராளமாக -- சீராகக் கிடைக்கச் செய்யவும் கூட்டுறவு இயக்கம் ஒன்றாலேயே முடியும் என்பதை நியாயமான எந்த அரசும் ஒப்புக்கொள்ளும்.

மகளிர் சிக்கனமானவர்கள்; காரியங்களைச் செட்டாகச் செய்வார்கள் என்றாலும், இதுவரை உள்ள நிலைமைகளைப் பார்த்தால் இப்பண்டகசாலைகள் பெற்றுள்ள இலாபம் மிகக் குறைவாகவே உள்ளது; இது இன்னும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

பன்னிரண்டு சங்கங்களில் சில சங்கங்கள் நட்ட கணக்கே காட்டியுள்ளன. கூட்டுறவு இயக்க அதிகாரிகளுக்கு அளிக்கப்படுகின்ற சம்பளத்தை அரசே ஏற்றுக்கொள்வதானால் ஒரு சமயம் இலாபமாகத் தெரியக்கூடும்; இப்படி ஒரு கோரிக்கை உள்ளது.

இலாபம் இதில் முக்கியமல்ல: சீரானவகையில் பொருள்கள் கிடைக்கச் செய்வதே முக்கியம். இந்த இயக்கம் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேர் விட வேண்டும். நகரின் 120 வட்டங்களிலும் இவை ஏற்பட வேண்டும்; அதற்குத் தமிழக அரசு தன்னாலான உதவிகளைச் செய்யும்.

இன்னும் நிறைய எண்ணிக்கையில் பெண்கள் இந்தச் சங்கங்களில் சேர வேண்டும்; இந்த இயக்கத்தின் தத்துவம் வளர வேண்டும்."

## செ. மாதவன்

ஆண்டு விழா மலரை வெளியிட்ட சட்ட கூட்டுறவு அமைச்சர் செ. மாதவன் குறிப்பிட்டதாவது;-

"தமிழ்நாடு முழுவதும் இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட வேண்டும். இச்சங்க உறுப்பினர்கள் பலர் அரிய கருத்துக்களை எழுதி இந்த மலரைத் தயாரித்திருக்கிறார்கள்.

"ஒருவர் எல்லோருக்கும்--எல்லோரும் ஒருவருக்கே" என்ற தத்துவம் வெற்றிபெற வேண்டும்.

இச்சங்கங்களுக்கு இலாபம் நோக்கமாக இருத்தல் கூடாது என்பதை ஒப்புக்கொள்கிறேன். அதே சமயத்தில் இவற்றில் நட்டமும் வரலாகாது.

நாடு முழுவதும் உள்ள கூட்டுறவு இயக்கக் கடைகளுக்குத் தேவையான பொருள்களை வாங்கிட சீரான ஒரு பெரிய அமைப்பு அவசியம்; நட்டம் குறைந்திட இந்த அமைப்பு உதவும்.

இந்தச் சங்கங்கள் தங்களது பொருள்களை வீடு நோக்கித் தேடிச் சென்று வழங்கவேண்டும்; அவ்வாறு செய்தால் வியாபாரம் அதிகமாக பெருகும்; இதற்குத் தேவையான வாகனங்களை வாங்க அரசு கடனுதவி அளிக்கும்."

## நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

**30--10--68**

**வெள்ளாளபாளையம்**

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: க. அன்பரசு; பேசுவோர்: வி. வி. வெங்கடாசலம், ஜி. பி. வெங்கிடு, மற்றும் பலர்.